# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.105/2023 P.W.7

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | திணேஷ் | த-பெ | முருகேசன் |
| ஊர்: | : | கீழ்குடி | | |
| வயது: | : | 33/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | சார்பு ஆய்வாளர் | மாவட்டம் | இராமநாதபுரம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **30.06.2026**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் சிவகங்கை மாவட்டம் தனிப்பிரிவு சார்பு ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். நான் கடந்த 15.10.2020 அன்று 18.00 மணிக்கு காரைக்குடி வடக்கு காவல் நிலைய சார்பு ஆய்வாளராக நிலைய பொருப்பில் இருந்த போது திருநெல்வேலி கல்லனை தெருவை சேர்ந்த முகமது இக்பால் என்பவர் மகன் முகமது அப்துல்லா என்பவர் வழக்கின் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் ஆஜர் ஆகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.811/2020 இதச பிரிவுகள் 482, 486, மற்றும் வர்த்தக முத்திரை சட்டம் 103(a), 104 ஆகிவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4.** ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை**

புகாரை எழுதியது யார் என்றால் புகார்தார் எழுத்து மூலமாக எழுதி கொடுத்தார். புகார் கொடுக்க எத்தனை நபர்கள் வந்தார்கள் என்றால் புகார்தாரருடன் சேர்த்து ஒருசில நபர்கள் வந்தார்கள். புகார் கொடுக்க வந்தவர்கள் யார் யார் எந்த பதவில் உள்ளவர்கள் என்று தெரியுமா என்றால் அது விசாரணை அதிகாரிக்கு தான் தெரியும். புகாரில் எதிரியை பிடிப்பதற்கு முன்பே எதிரியின் முகவரியை தெரியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை வைத்து எங்களிடம் புகார் எதுவும் அளித்தாரா என்றால் என்னிடம் அளிக்கவில்லை. எதிரியை பிடித்த இடத்தில் வைத்து கொண்டு காவல் நிலையத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டதா என்றால் இல்லை. எதிரியின் டிரேட் மார்க் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்தார்களா என்றால் அது பற்றி தெரியாது. எத்தனை பீடி பன்டல்கள் எங்கள் முன் ஒப்படைக்கப்பட்டது என்றால் முழுமையாக தான் பார்த்தேன் தனிதனியாக பிரித்து பார்க்கவில்லை. எதிரியையும், பொருட்களையும், இருசக்கர வாகனத்தையும் யார் எங்களிடம் ஒப்படைத்தார்கள் என்றால் புகார்தார்தான் ஒப்படைத்தார்.

எதிரியின் பீடி பன்டல்களுக்கும், புகார்தாருடைய பீடி பன்டல்களுக்கும் என்ன வேறுபாடு உள்ளது என்று காட்ட ஆதாரம் ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புகார்தாரர் அவர் சொன்ன பணியில் தான் இருந்தார் என்பதற்கு ஆதாரம் ஏதேனும் தாக்கல் செய்தாரா என்றால் என்னிடம் புகார் கொடுத்தார். தவறான புகாரின் பெயரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.06.30 16:54:14 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.